JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-9 Witness
for Prosecution

CC. No. 69/2021 Crime No. 310/2015 Station Appakodal

| Name | PW–9– அம்பிகா | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025 | | | |

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோவை மாவட்டம் சிறுமுகை, காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றியபோது கடந்த 11.12.2015ஆம் தேதியன்று நிலைய அலுவலில் இருந்தபோது கோயம்புத்தூர், சௌரிபாளையம் ரோடு, கதவு எண். 21 கருப்புசாமி நகரில் வசிக்கும் துரைராஜ் என்பவர் மகன் ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து எழுத்து மூலமான புகாரினை அன்றைய தினம் 16.00 மணிக்குப்பெற்று நிலைய குற்ற எண். 310/ 2015 சட்ட பிரிவுகள் 147, 294(b), 506(i), 406, 420 IPC ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகார் மனுவையும் மாண்பமை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை புலன்விசாரணைக்காக உயர் அதிகாரிகளின் பார்வைக்கு வைத்தும், ஒரு நகலை நிலைய ஆய்வாளர் திரு.ரமேஷ் அவர்களின் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்தேன், , புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**1 மற்றும் 2 ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர், புகாரை காவல் நிலையத்தில் கொடுக்கும்போது அவர் எழுதி தான் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார் என்றால், சரிதான். புகார்தாரர் யார் யார் பெயரில் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்திருந்தார் என்றால், ரமேஷ் குமார், மகேஷ், பாலதண்டாயுதபாணி, ராஜேந்திரன், ராஜா தேக்கன், தங்கராஜ் மற்றும் சந்திரன் ஆகியோர் மீது புகார் கொடுத்திருந்தார். புகார்தாரர் நிலையம் ஆஜராகி புகாரினை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.11.10 18:54:50 +0530

கொடுக்கும்போது எதிரிகள் காவல் நிலையத்தில் தான் இருந்தார்கள் என்றால், சரியல்ல. அப்போது அவர்கள் காவல் நிலையத்தில் இல்லை,

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் புகார்தாரர் Kian Fin Service Private Limited வங்கி கணக்கிற்கு ரூ.25,00.000/- மற்றும் ரூ.20,00.000/- என மொத்தம் ரூ.45,00.000/- அனுப்பி உள்ளார் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி Kian Fin Service Private Limited டெல்லியில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றைய தினமே காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால், புகார் கொடுத்த அன்றைய தினமே விசாரித்தார் மற்றும் மற்றொரு முறையும் என்னை விசாரித்தார். மற்றொரு முறை விசாரிக்கும்போது என்னிடம் ஏதேனும் வாக்குமூலம் பெற்றாரா என்றால், விசாரித்தார். வாக்குமூலம் பதிவு செய்தார், முதல் முறை விசாரித்ததில் என்னிடம் எந்த வாக்குமூலமும் பதிவு செய்யவில்லை. இரண்டாம் புலனாய்வு அதிகாரி விசாரித்து என்னிடம் வாக்குமூலம் பதிவு செய்தார்.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யவில்லை என்றாலும், சரியல்ல. நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல.

காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது நான் எங்கு பணியில் இருந்தேன் என்றால், கரூர் மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் காவல் ஆய்வாளராக இருந்தேன். புலன் விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட குவிமுச 161 வாக்குமூலத்தில் நான் ஈரோடு மாவட்டம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்று கூறவில்லை என்றால், சரியல்ல. தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.

**3, 6 மற்றும் 7 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச.பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.**

**3, 6 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.10 18:54:58 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.